Eelakesari Educational Supplement

விலை சதம் 3

ஓம்

# ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

"கற்பவை கற்றுக் கற்றாங் கொழுக"

புத்தகம் 2 } சுன்னாகம்: வெகுதானியஹூ பங்குனிமீ" கஙஉ (26-3-39) { இல. 23

## சங்கீதக் கல்வி

தற்காலத்திற் சங்கீதம் ஓர் முக்கிய பாடமாகக் கருதப்பட்டு வருகின்றது. சங்கீதம் இலங்கையில் வர வர விருத்தியடைந்து வருகின்றது. எனினும் திருப்திகரமான சங்கீத வுணர்ச்சி ஏற்பட இன்னும் எத்தனையோ வருடங்கள் செல்லும்.

இந்தியாவில், விசேடமாகத் தென்னிந்தியாவிலுள்ளவர்கள் சங்கீதவன்மை பெரிதுமுடையவர்களாகக் காணப்படுகிறார்கள். ஆண்கள் பெண்கள் என்றும் இருபாலாரும் சங்கீத அறிவைப் பெறுவது வாழ்க்கைக்கு இன்றியமையாத தென்றெண்ணிச் சிறுவயசில் முறையாகக் கற்றுக் கொள்ளுகின்றார்கள். பெண்களுக்கு சங்கீதம் ஓர் ஆபரணமாகக் கருதப்படுகின்றது. பெரிய சங்கீதக் கச்சேரிகளில் பெருந்தொகையான பெண்கள் சங்கீதத்தைக் கேட்டு இன்புறும் காட்சி இந்தியாவில சர்வசாதாரணமாகும்.

நமது நாட்டின் கல்விமுறை சங்கீதத்தை எத்தனையோ ஆண்டுகளாக அலட்சியம் செய்து வந்தமையாலும், சங்கீதத்தை விருத்திபண்ண தக்க ஸ்தாபனங்கள் இன்மையாலும், பிறநாகரீக நிலையுளகப்பட்டிருந்ததனாலும், முத்தமிழிலொன்றாகிய இசைத்தமிழ் இலங்கையிற் பரவாது போயிற்று. இலங்கையிலுள்ள ஆண்பெண்களில் நூற்றுக் கொருவீதஞ் சங்கீதந் தெரிந்தவரை காணுதல் அரிது. ஆனால் இந்தியாவில் நூற்றுக்கு ஐம்பது பேருக்குக் குறையாதவர்கள் சங்கீதந் தெரிந்தவர்களாகக் காணப்படுகிறார்கள்.

சென்ற திங்கட்கிழமையன்று திரு. உவாற்சன் அவர்களாற் திறந்துவைக்கப்பட்ட கோடைகாலச் சங்கீதவகுப்பு நமது நாட்டின் சங்கீதக் குறைவை நிறைவாக்கும் என்று கருதுகின்றோம். ஆசிரியருக்குச் சங்கீத ஞானமிருந்தாலன்றிப் பிள்ளைகளுக்குச் சங்கீத ஞானம் ஏற்படமாட்டாது. சங்கீத வகுப்பிற் சேருகிறவர்கள் சங்கீதத்திற் பூரணதேர்ச்சியை ஒரு மாசத்திற்குள் அடைந்து விடலாம் என்று எண்ணுதல் தவறாகும். பலவருடங்கள் முயன்று சங்கீத வன்மையைப் பெற வேண்டும்.

## இலவச மத்தியான போசனம்

சில காலமாக நமது நாட்டில், இலவச மத்தியானப் போசனம் வித்தியாபகுதியாரால் மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வருவது யாவரும் அறிந்த விஷயமாகும். வித்தியாபகுதியார் மத்தியான போசன விஷயத்தை எம் முறையில் நடாத்துகின்றனரென்பது ஆராயத் தக்கது. வித்தியாபகுதியினர் சில சில பள்ளிக்கூடங்களுக்கே உணவு கொடுக்கின்றனரென்றும், உணவை அவசியம் பெறவேண்டிய பிள்ளைகள் உணவுபெறாமல் பட்டினிகிடக்கிறார்கள் என்றும் கொழும்பு நகரசங்கத் தலைவர் குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது. சென்ற வருடத்தில் மத்தியானப் போசனத்துக்காக விடப்பட்ட தொகை பத்துலட்சம் ரூபா. அதிற் காற்பங்கு தொகைதான் செலவு செய்யப்பட்டுள்ளது. இவ்வருடம் எட்டுலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா விடப்பட்டிருக்கிறது. இவ்வருடம் மத்தியான போசனம் வேண்டிய பள்ளிக்கூடங்களுக்கெல்லாம் வித்தியாபகுதியார் உதவி செய்ய முன்வருவாராக.

கங்கை நிலவுசடைக் காட்டானைத் தந்தையெனும், புங்கவெண்கோட் டானைபதம் புந்திவைப்ப தென்னாளோ.

# 'மானிட வாழ் நாள் விதிகள்'

(சம்பை கல்விநிலையப் பழையமாணவன்,
பள்ளத்தூர் திரு. மு. சபாரேத்தினம்)

1. ஒரு பொழுதும் சபதம் செய்யாதே.
2. எப்பொழுதும் உண்மையே பேசு.
3. பிறரைப்பற்றி தூஷணமாய்ப் பேசாதே.
4. சேர்ந்தால் நல்லோருடன் சேர். அன்றேல் ஒருவருடனும் சேராதே.
5. உன் உடன்படிக்கைப்படி நடந்துகொள்.
6. கூடுமானவரை உன்னுடைய இரகசியங்களை உன்னுடனே அடக்கி வைத்துக்கொள்.
7. நல்லொழுக்கமென்பது எல்லா விஷயங்களுக்கும் மேலானது.
8. கூடுமானவரை கடன் வாங்காமலிரு.
9. நீ முன்னுக்கு வர விரும்பினால் திரவியவந்தனுக்கு அவசரப்படாதே.
10. நீ ஒருவனுடன் பேசும்போது அவன் முகத்தைப் பார்த்துப் பேசு.
11. நீ மனைவியை ஸம்ரக்ஷிக்கும் நிலைமைக்கு வரு[illegible]யில் கல்யாணஞ் செய்து கொள்ளாதே.
12. உன் வரவுக்குத் தக்கபடி ஜீவனம் செய்.
13. பாலியனாயிருக்கையில் பொருள் மிகுத்து வைத்[illegible]தான் விருத்தனானபோது கஷ்டப்படாமல் செலவு செய்யலாம்.
14. ஒருவர் உன்னைப்பற்றி தூஷணமாய்க் கூறினும் அவர்கள் வார்த்தை பொய்யாகுமாறு நல்ல வழியில் நடந்துகொள்வதே அவர்களுக்கு நீ செய்யும் தக்க தண்டனையாகும்.
15. நீ படுக்கைக்குப் போகு முன் அன்று பகலில் செய்த விஷயங்களின் நன்மையையும் தீமையையும் சிந்தித்துப்பார்.
16. ஒரு பொழுதும் சோம்பேறியாயிராதே. உன்னுடைய கைகளின் உதவியால் ஒன்றையும் செய்யாவிடினும், மனத்தினாலாவது சுறுசுறுப்பாயிரு.
17. ஒரு பிழையான காரியத்தைச் செய்துவிட்டால் அந்த இடத்தில் உன் வாயை அசைக்காதே, அசைத்தால் துன்பம் நேரிடும்.
18. உன்னை யாராவது சற்குண விஷயங்களைப்பற்றி கேட்டால் பதில் உரை; தீய விஷயங்களைப் பற்றிக் கேட்டால் மௌனமாயிருந்து விடுதலே நலம்.
19. உன் வாழ் நாள் முழுவதையும் பாழ் நாள் ஆக்காமல் இருப்பதுடன், உன்னால் இயன்றவரை பிறர்க்கு உதவி புரிய முயலுதல் வேண்டும்.
20. அனுதினமும் தேகப்பயிற்சி செய்தல் வேண்டும். எப்பொருளையும் அளவுடன் உட்கொள்ளுதல் வேண்டும். அளவுக்கு மிஞ்சினால் ஆபத்துத்தான்.
21. தனக்கு மிஞ்சினதுதான் தருமம் என்பதை நீ உணருதல் வேண்டும்.
22. எவனொருவன் உன்னைப் புகழ்ந்து பேசி உன்னிடம் ஒரு பொருளை வாங்கவேண்டுமென்னும் நோக்கத்துடன வருகிறானோ அவனுக்கு உன்னிடம் அப்பொருள் தேவையில்லாதிருப்பினும் கொடாதே. கொடுத்தால் பின்னர் ஒருகால் உனக்கே அது தீங்காய் வந்துமுடியும்.
23. நீ அன்னியருடன் பேசும்பொழுது, ஆணையிட்டாவது, பந்தயங் கூறியாவது, பொய் பேசியாவது பேசுதல் கூடாது. ஆணையிடுவது ஆபத்துக்காலத்தில் தான் செய்யவேண்டும். பந்தயங் கட்டுவதில் நீ தனிமையாக ஆரம்பித்தாவது, அல்லது அன்னியர் கட்டி அதில் நீ சேருதலாவது கூடாது. பொய்யென்னும் விஷயத்தில் உன்னுடைய தலை போனாலும் கூட பேசுதல் தகாது. பேசு முன் நீ மேற்கொண்ட மூன்று விஷயங்களையும் நன்கு உணர்ந்த பின்னர் தான் பேச முன் வரவேண்டும்.
24. அன்னியர் உனக்குச் செய்துள்ள தீங்கிற்குப் பதிலாக நீ அவர்களுக்கு தீங்கிழைக்காதிருத்தலே பெருத்த தண்டனை விதித்தற்குச்சமனாகும்.
25. எப்பொழுதும் தன்னலம் பாராட்டுபவராயிராதே. பிற நலத்தையும் பாராட்டுபவராயிரு.

—'தனவணிகன்'

சிங்கள நீதிக்கதைகள்-1

# லோபி ஆனந்த செட்டியார்

[வ: நீ]

[திருநெல்வேலி காவியபாடசாலை சிங்கள வகுப்பு ஆசிரியரும் ஆநந்த் ஸ்ரீசுமணவித்தியாசாலை ஆசிரியரும், தமிழ்மக்கள் சிங்களமும் சிங்களமக்கள் தமிழும் கற்க உதவி செய்து வருபவரும், பல சிங்கள தமிழ் நூல்களின் ஆசிரியருமாகிய யாழ்ப்பாணம் நாக விகாரை புத்ததரு அவர்களால் சிங்களத்திநின்றும் எடுத்துச்சொல்லப்பட்ட சில நீதிக்கதைகள், சில திருத்தங்களுடன் தொடர்பாக வெளியிடப்படும்.]

ஆதிகாலத்திலே, கௌதமபுத்தர் வசித்தகாலத்திலே ஒப்பாரு மிக்காருமில்லாத பெருந்தனவந்தராக விளங்கினார் ஆநந்த செட்டியார். அவர் பரமலோபி - வடிகட்டினலோபி. வயிறார உண்டதும், ஏற்ற வஸ்திரத்தை உடுத்தியதும், கிடையாது. அவர் வீட்டு எறும்புகளும் பட்டினிதான்.

பிறக்கும்போது கொண்டு வந்ததுமல்ல, இறக்கும்போது கொண்டு போவதுமல்ல, இடையில் தோன்றியழியும் மின்னலைப்போன்றதே செல்வம். வாழ்க்கையின் முற்றுப்புள்ளி நெருங்க நெருங்க, அத்தகைய நிலையற்ற செல்வப் பொருட்களை நிலையுளதென நினைந்து நினைந்து அடிக்கடி நெட்டுயிர்த்து வருந்தி வாடினார் ஆநந்த செட்டியார். தன் ஏக மகனாகிய மூலசிரியை அழைத்து, "மகனே! என்னை மரணதேவதை தேடியலைகிறாள், வாழ்க்கையின் எல்லை சமீபித்து விட்டது. இச்செல்வங்களை நாசஞ்செய்து விடாதே. கஷ்டப்பட்டுப்பெற்றவை அப்பொ

அஞ்சுமுகங் காட்டாமல் ஆறுமுகங் காட்டவந்த, செஞ்சரணச் சேவடியைச் சிந்தைவைப்ப தெங்காளோ.

ருட்கள். பொருளின்றேல் 'இவ்வுலகமில்லை'. நீயும், நன்றாக உழைத்து அநாவசியமான செலவுகளைக் குறைத்து, உண்டியையும் உடையையும் சிக்கனப்படுத்தி எல்லாராலும் மதிக்கத்தக்க பெரிய செல்வனாக வேண்டும். சிறிய கறையான்தானும் நாள்வீதம் இடையறாது செய்கிற பெருமுயற்சியின் பயனால் பெரிய யானையாலும் தகர்க்க முடியாத புற்றைக்கட்டுகிறது. தேனீக்கள் தாம் குடிப்பதைக் குறைத்து கஷ்டங்களையும் பொருட்படுத்தாது இடையறாது தேடியே அதிக தேனைச்சேர்க்கின்றன. எனையும் சிறிது சிறிதாகச் சேர்த்தே பெருந்தொகையாகின்றன. ஒவ்வொரு அரிசியாகச் சேர்த்தே மூட்டைகளாகின்றன. ஆதலால் மகனே! நான் சொல்லும் இவ்வுபதேசங்களை கடைசிவரை மறந்துவிடாதே. தெய்வவாக்கென்று நினைத்துக்கொள்", என்று உபதேசம் செய்தார். ஒவ்வொரு நாளும் – இல்லை ஒவ்வொருநேரமும் அவருக்கு அதே வேலைதான்.

அருமை மைந்தனுக்குத்தானும் சொல்லாது இன்னும் அளவு கடந்த பொருட்களை ஐந்து நிலவறைகளில் வைத்திருந்தார் செட்டியார். பண ஆசையாற் கட்டுண்டு மாய்ந்த அவரை மரணதேவதை அணைத்துக் கொள்ளப் போகும் நேரத்தும் இவ்விஷயத்தை மூலசிரிக்கு வெளியிடவில்லை. ஆயினும் மூலசிரி, 'மகாதனவந்தர்' என அவ்வூர் அரசனாலேயும் அழைக்கத்தக்க பெருஞ் செல்வனானன்.

கிராமத்தில் கூலிவேலை செய்து வயிறு வளர்த்து வரும் எளிய – மிகவும் கீழானமக்கள் ஒரு சிலர் இருந்தனர். கூலிப்பிழைப்பினராயிருந்த போதும் வறுமையை அறியாதவர் அவர்கள் ஒரு காலத்தில் திடீரெனவறுமையடைந்தனர். பிழைப்புக்கே வழியில்லை. நேரத்துக்குக் கஞ்சிதானும் கிடையாது. அந்தோ! வருத்துகிறது கொடிய வறுமைப்பிணி. இதற்குக்காரணம் தங்கள் 'கிராமத்தில் 'மூதேவி குடி கொண்டாள்' எனக் கூறினர். பல பல கட்சிகளாகப்பிரிந்து பிழைப்பை நாடிச் சென்றார்கள் சிலர். வறுமையைக் காரணமாகக் கொண்டே கலகஞ்செய்து குடும்பத்தைப்பிரிந்தனர் சிலர். இவ்வாறு இவர்கள் நிலைகலங்கித் திக்கு திசை தடுமாறிச் சென்றனர்.

புருஷனால் பிரியப்பட்டவளும் கருப்பவேதனை கொண்டவளுமாய் ஆதரவற்ற அநாதையாய் அவதியுற்றாள் ஒரு மாது. பாவம்! அவள் சுற்றத்தார் இனத்தார் ஒருவருமின்றித் தனியாக வசித்தாள். கருப்பம் நிறையப்பெற்று வேதனை அதிகரித்து உதவிசெய்வார் ஒருவருமின்றி பெற்றாள் ஒரு குழந்தையை. என்ன கேவலம்! என்ன சொரூபம்!! இப்படியும் ஒரு பிறப்பா ? கண்டவர்களால் அருவருத்து வெறுத்து ஒதுக்கப்பட்ட அவலட்சணரூபமாக மூதேவியெனத் தக்கதாக இருந்தது அக்குழந்தை. எப்படித்தானிருந்தாலும் என்னசெய்வது? தன் கடமையென நினைந்து சீராட்டிப் பாராட்டி வந்தாள் தாய். உணவிற்காகப்பிச்சைக்குச் செல்லுவாள். அவள் தனியாகச் சென்றபோது சிறிது கிடைத்தாலும், அந்த அவலட்சணமான பிசாசுடன் சென்றால் அன்று அவள் பாடு, அதோகதிதான்.

அந்தச் சொரூபம் (குழந்தை) வளர்ந்து தக்க பருவத்தை அடைந்தது. அதற்கு முற்பிறப்புயோசனைகள் தொடர்ந்தன. ஏதோ நினைந்து நினைந்து கண்ணீரைச் சொரியும். அங்குமிங்குமாக அலைந்து திரியும். விழிவிசேடத்திற்கு காத மூதேவி எனவைதனர் எல்லோரும்.

ஒரு நாள் அந்த மூதேவி, 'மகாதனவந்தர்' மூலசிரி வீட்டுக்குச் சென்று அங்குள்ள மரந்தடிகளையும் வீடு வாசல்களையும் பார்த்துப் பார்த்து அழுதது. இதைக்கண்ட மூலசிரி தனக்கு அழிவுகாலம் அண்மியதெனநினைத்து வருத்தமடைந்து "சீ மூதேவி! போ" என்று எச்சிலைக்காறி உமிழ்ந்தான். தன் வேலைக்காரரை அழைத்து, அடித்து, உதைத்து அனுப்பும்படி கட்டளையிட்டான்.

புத்தர் பெருமான் தன்சீஷர்களுடன் அவ்வழியாகச் சென்றவர், அவ்விடத்து நின்று மூலசிரியை வரவழைத்தார்.

"மூலசிரி இது யார் தெரியுமா"

"இது ஒரு மூதேவி — எளிய பிசாசு"

"உன் தகப்பனார் தான்"

"என் தகப்பனாரா ? சீ மூதேவி"

"இவர் தான் உன் தகப்பனார் ஆனந்த செட்டியார்"

"இல்லை இல்லை இது மூதேவி"

"உன் தகப்பனார் லோபியல்லவா? தானும் அனுபவியாது பிறருக்கும் ஈயாது தேடிவைத்த கசடனல்லவா அவர்? உனக்குத்தானும் பணமுள்ள ஐந்து நிலவறைகளைக் காட்டாது விட்டார். அவர் தான் இக்கோலத்தைப்பெற்று எளியசாதியிலே பிறந்து அவர்களையும் கஷ்டத்திற் குள்ளாக்கினார். பிறருக்கு உபகாரம் செய்யாதவர்களே இக்கதியை அடைவார்கள்"

"ஐந்து நிலவறைகளில் ஏராளமான திரவியங்கள் இருக்கின்றனவென்றும், ஒரு பூதம் காவல் செய்கிறதென்றும் சொல்லுகிறார்களே! அவை எனது தந்தையாருடையதா ?"

"சந்தேகமில்லை. அவருடையதுதான். இவரை அழைத்து, ஸ்நானம்செய்து, உண்டு உடைகொடுத்து, படுக்கை அளித்து அன்பாக நிலவறைகளைப்பற்றியும் பிறவற்றையும் கேள். அவர் எல்லாம் கூறுவார்".

மூலசிரி, புத்தர் பெருமானது பாதாரவிந்தங்களைப் பூசித்து வணங்கி அவரை வழியனுப்பிவிட்டு, அவர் கூறியபடியே செய்தான். தகப்பனார் முற்பிறப்பு நிகழ்ச்சிகளைக்கூறி, தான் லோபியாயிருந்த படியால் இத்தகைய நிலையை அடைந்தாரென்றும், தன்னைபோலக் கஷ்டமனுபவிப்பது கூடாதென்றும் ஐந்து நிலவறைகளிலும் உள்ள பொருட்களையும் தான தருமம் செய்து இன்பத்தை அடையும்படியும் கூறினார்.

மூலசிரி அன்றுதொட்டே தன் பொருட்களெல்லாவற்றையும் பிறருக்கு அளித்து பிறவுயிர் மகிழ தான் மகிழ்ந்து இனிது வாழ்ந்தான். ஆதலினால் நாங்களும் லோபி ஆனந்த செட்டியாரைப் போலாகாது, பிறருக்கீந்து தருமநெறியைக் கடைப்பிடித்து நல்வழி அடைவோமாக.

(பெயர்கள் எவ்வரையுங் குறியா)

# சொன்ன சொற் தவறாத சொர்ண வடிவேலன்

*கர்ண பரம்பரைபோற் கண்டுணர்ந்தோர், சொல்மொழியும்*
*சொர்ண வடிவேலன சூட்சியினல்—வர்ணகுல*
*நல்விஜயன ஏமாந்த நற்கதையும் நானெழுதக்*
*கல்வியனு பந்தமே நீ காட்டு*

இரவு பத்துமணியிருக்கும். எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. சந்திரனும் குறைவற்ற தன்னொளியை உலகிற்குக் காட்டிக்கொண்டிருக்கின்றான். விஜயன் என்னும் அரசன் தன் உருக்கரந்து வீதிதோறும் திரிந்து ஈற்றில் பொற்கொல்லர் வீதியை யடைகின்றான். ஒரு பொற்கொல்லன் வீடு. அன்னவன் பெயர் முருகேசு. அன்னவனுக்குப் பொன்னன்ன மூன்று குமாரர். மூத்தவன் முத்துவேலு மற்றவன் குழந்தைவேலு. இளையவன் சொர்ணவடிவேலு. தந்தை மூவரையும் அருகழைத்து "இந்த நிலவிலே உங்களை நான் ஒரு கேள்வி கேட்கப் போகின்றேன். எப்பொழுதும் உண்மையாக நடந்துகொண்டால் யாதொரு கெடுதியும் வராது. அதிருக்க, "முத்துவேலு! உன்னிடம் யாராவது நகை செய்து தரும்படி வெள்ளியோ பொன்னோ கொண்டுவந்து தந்தால் நீ அதில் எடுப்பாயோ? எடுக்கமாட்டாயோ? சொல்" என்று கேட்க, அவன் "யார் தந்தாலுஞ்சரி நான் கொஞ்சமும் எடுக்கவேமாட்டேன். இது நிசம்" என்றான். குழந்தைவேலு என்பான் எழுந்து "உண்மையைச் சொல்லவேண்டுமானல் கொஞ்சம் எடுப்பேன் என்றே சொல்லவேண்டும்" என்றான். இவற்றைக் கேட்ட சொர்ணவடிவேலனுக்கு ஆத்திரம் அளவு கடந்து அவன் வாய் மூலம் வெளியேறுகிறது. தமையன்மாரைப் பார்த்து "நீங்கள் எவ்வளவு சுத்தமாயிருந்தாலுஞ்சரி உலகம் கதைப்பதையும் தடுக்க முடியுமா? என்ன? எவ்வளவு இழிவான கதைகளை யெல்லாம் எங்கள் குலத்தின்மேற் சுமத்துகிறார்கள். 'தாய்ப்பொன்னுக்குள் மாப்பொன்னெடுக்குந் தட்டார்' என்றும் 'தட்டானைத் தொட்டானுங் கெட்டான்' என்றும், 'தட்டாரை நம்பாமலல்லவோ எம்பெருமான் தங்கவணி பூணுமல் பொங்கரவம் பூண்டார்' என்றும் கதைக்கிறார்கள். இத்தகைய வம்புகளையெல்லாம் கொஞ்சமும் யோசியாமல் வாயில் வந்தபடி கதைக்கிறவராயிருந்தாலுஞ்சரி தந்த பொன் முழுவதையும் நானெடுத்துக் கொண்டு செம்பு பித்தளையிற் தான் நகை செய்து கொடுப்பேன். இது நிசம். எந்த இராசாதிராசனாயிருந்தாலுஞ் சரிதான்" என்று ஆத்திரத்துடன் கூறினான்.

மாறுவேடத்துடன் தெருத்திண்ணையில் நிற்கும் இராசாதிராசன் விஜயன் காதில் நுழைந்தது இக்கதைகளெல்லாம். அவனுக்குக் கோபம் கொள்கலம் நிரம்பி வழிகிறது. நாளைக்கு இவனை அரண்மனைக்கு அழைத்து நானே ஒரு குடஞ் செய்விக்க வேண்டும். என்னசெய்கிறான் பார்க்கலாம் என்று எண்ணிக்கொண்டு அரண்மனை சேர்கின்றான். அடுத்த நாள் பொழுது புலர்ந்தது. அரசனின் ஏவற்படி சிலர் சொர்ணவடிவேலனின் வீடு சேர்கிறார்கள். "உனக்கு நல்ல காலம் வந்திருக்கிறது. எங்கள் அரசர் உன்னை அழைத்து வரும்படி சொன்னார். ஒரு தங்கக்குடம் செய்விக்கலாம் கெதியில் வா" என்று உடனழைத்துக் கொண்டு சென்றார்கள். அரசன் தருகிற தங்கம் முழுவதையும் நான் எடுத்துக்கொண்டு அரசனுக்கு 'டூஸ்' விட்டுவிடுவேன் என்று சந்தோஷத்துடன் அரண்மனை சேர்ந்தான் சொ: வேலன். அரசன் தன்மனதில் "சொர்ணவடிவேலனைக் கடுங்காவலில் வைத்துக் குடம் செய்விக்கவேண்டும். அப்போது என்ன செய்வான் பார்க்கலாம்" என்றெண்ணிக்கொண்டான். தட்டான் தன்னை ஏய்க்கமாட்டான் என்பது அரசனின் எண்ணம் போலும். தட்டான், அதிலும் சொர்ணவடிவேலன் அரசனை மாத்திரமல்ல அரசனைப்போல ஐம்பத்தாறு பேரையும் ஒருமுறையில் ஏய்ப்பான். நிற்க,

அன்றே அரசன் ஏவலாளர்களை விடுத்துக் குடத்திற்கு வேண்டிய தங்கத்தைப் பெற்றுக்கொண்டு தட்டானை அழைத்து "நீ மூன்று நாட்களுக்குள் குடம் செய்து முடித்து விடவேண்டும். அந்த மூன்று நாட்களிலும் ஒரு இடமும் போகப்படாது. வேண்டிய சௌகரியங்கள் யாவும் விரும்பியவாறே கிடைக்கும். ஏனிப்படிச் சொல்கிறேன் தெரியுமா? 'தாய்ப்பொன்னிலும் மாப்பொன் எடுக்கிற தட்டார்' என்று உலகம் சொல்லுகிறதினுற் தான் என்றறி" என்றான். தட்டான் தன் எண்ணம் பலிக்காதென்று துயருற்றான். என்றாலும் கடைசிவரையும் விடுவதில்லை. ஒரு கைபார்க்கத்தான் வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான். குடஞ் செய்யத் தொடங்கிவிட்டான் தட்டான். யோசனை முழுவதும் தங்கத்தைத் திருடுவதிற்தான். ஏழு எட்டுக்காவலாளர் தட்டானைச் சூழ்ந்திருக்கிறார்கள். சாப்பாடு உண்ணீர் முதலியன யாவும் நேரந் தவறாது தட்டானைக் கிட்டுகின்றது. அந்த மூன்று நாளும் தட்டானுக்கு அரசனிலும் மரியாதை கூட. இருக்குமிடந் தேடி யாவும் வருமென்றாற் சொல்வானேன். இராப்பகல் ஓயாது வேலை நடக்கிறது. இரவு விடிந்து பகலானாலும் தட்டானுக்கு மனம் விடிவதேயில்லை. அவனின் யோசனை ஒரு தலைப்புக் கயிறுபோல உலகமெல்லாம் போகிறது. ஏதோ ஒரு விதமாய்த் தங்கம் முழுவதும் எடுக்காமல் விடுவதில்லை என்று உறுதி கொள்கின்றான். ஏதோ ஒரு யுக்தி தட்டுப்பட்டு விட்டது போலும்! போகப் போகத் தெரியுந்தானே!

வேலையும் முடியப்போகிறது. அரசனும் தட்டானும் தாம் தாம் கொண்ட எண்ணங்களைப் பூர்த்தியாக்குஞ் சமயம் கிட்டிவிட்டதென் றெண்ணுகின்றனர். வேலை முடிந்தது. குடம் அரசன் கரத்தும், குடஞ் செய்த கூலி தட்டான் கரத்தும் அடைகின்றன. சொர்ணவடிவேலன் நின்று யோசிக்கின்றான். அரசன் "என்ன யோசிக்கிறாய்?" என்று கேட்டான். (தட்டான் 'டூஸ்' விடும் நேரம் கிட்டுகிறது!) தட்டான் அரசனைப் பார்த்து "அரசே, குறைவறக் குடஞ் செய்து முடித்தேன். தாங்களும் கூலியைக் குறைவறக் கொடுத்தீர்கள். ஆனால் எங்கள் குலாசாரக் கொள்கையின்படி யாருக்காவது குடம் செய்து கொடுத்தால் நல்லநாட் பார்த்துக் குடஞ் செய்த தட்டானே முதன் முதல்

---

துய்ய கரமலரால் சொல்லாமல சொன்னவுண்மை, ஐயனைக்கல் லால்அரசை யாமணைவ தெங்ஙாளோ.

குளத்தில் நீர் அள்ளவேண்டும். அதுதான் இப்போதுள்ள குறை" என்றான். அரசன் கேட்டு "ஏன் தான் அந்தக் குறையை வைத்துக்கொள்ள வேண்டும். நீயே நல்ல ஒரு நாளில் இங்கு வந்து எனது ஏவலாளருடன் சென்று நீர் அள்ளிக்கொண்டு வரலாம்" என்றான். சொர்ணவடிவேலன் தன் எண்ணம் பலிக்குமென்றெண்ணி வீடு சேர்ந்து, தான் அரசனுக்குச் செய்து கொடுத்த தங்கக்குடத்தின் அளவில் ஒரு செப்புக்குடம் செய்து தங்க முலாமிட்டு, அரண்மனைக்கருகிலுள்ள ஒரு குளத்தினுள் அமிழ்த்திவிட்டு அரண்மனைக்குச் சென்று அரசனை வணங்கி, "அரசே, இன்றைக்கே நல்ல நாள். ஆதலால் இப்பொழுதே குடத்துடன் நீர்மொள்ளப் போகவேண்டும்" என்றான். அரசனும் தட்டானின் சூழ்ச்சியை அறியாமல், ஏவலாளர்களை அழைத்துக் குடத்தைத் தட்டானிடம் கொடுத்துத் தண்ணீர் மொண்டு வரும்படி அனுப்பினான். தட்டானும் ஏவலரும் குளத்தை நோக்கிப் போகின்றனர். தட்டான் குடத்துடன் குளத்தினுள் இறங்கித் தங்கக் குடத்தை நீரினுள் அமிழ்த்தி வைத்துவிட்டுத், தான் முன் வைத்த செப்புக்குடத்தை எடுத்துத் தோளில் வைத்துக்கொண்டு ஏவலருடன் அரண்மனைக்குச் சென்றான். அரசனும் குடத்தைப் பெற்றான். தட்டானும் வீடு சேர்ந்தான். அன்றிரவு குளத்தினுள் வைத்த தங்கக் குடத்தை எடுத்துக்கொண்டு வீட்டையடைந்தான்.

நாட்கள் சில சென்றன. அரசன் வீட்டிலுள்ள குடம் செப்புக் குடமாகத் திகழ்ந்தது ஏவலாளர்மூலம் சொர்ணவடிவேலனை அரண்மனைக்கு அழைத்தான். தன்னை ஏமாற்றியதாக அவன்மீது குற்றஞ் சுமத்தினான் அரசன். சொர்ணவடிவேலன் துணிவாக அக்குற்றத்தை எதிர்த்து வாதித்தான். அரசனைப் பார்த்து "அரசே, தாங்கள் என்மீது சுமத்திய குற்றம் என்னால் ஒப்புக்கொள்ளப்படுமாயினும் வேறு சில நியாயங்கள் கூறவேண்டியிருக்கிறது. நான் அன்றொரு இரவு எனது சகோதரர் முன்னிலையில் கூறியவற்றை நிறைவேற்றவேண்டுமென்பதே எனது நோக்கம். நீங்கள் "தட்டான் என்னை ஏமாற்றமாட்டான்" என்று எண்ணியிருந்தீர்கள். ஆனால் நான் ஏமாற்றிவிட்டேன். அதைவிட்டு மனஸ்தாபப்படுகின்றேன். சொன்ன சொல்லை நிறைவேற்றிவிட்டேன் என்று சந்தோஷமுறுகின்றேன். சொன்ன சொல் தவறக்கூடாதென்றே அவ்வாறு செய்தேன். இனி உங்கள் தீர்ப்பு எவ்வாறாயினும் ஏற்கச் சித்தமாயிருக்கின்றேன்" என்று கூறியதும் அரசனுக்கு எரியிற நெருப்பில் எண்ணெய் ஊற்றினாற்போல் கோபம் அதிகரித்தது. வேந்தன் சிறினால் துணையில்லையல்லவா? எவ்வித விரிவுரையும் நிகழ்த்தாது தன் எண்ணப்படியே சொர்ணவடிவேலனைச் சதாகாலச்சிறையிவிட்டான். சிறைக் கூடத்திலும் சொ. வேலன் சும்மா இருப்பானா? தன்னாலான தந்திரங்கள் யாவும் செய்தான். (விரிவஞ்சி விடுக்கின்றேன்.) இன்னொருமுறை பார்க்கலாம். நமஸ்காரம்! சுபமஸ்து!!

S. ஆறுமுகம் (184)
கொக்கிளாய்.

இங்கே கத்தரிக்க

# ஈழகேசரி இளைஞர் சங்கம்

## முதலாண்டு மகாநாடு

### இளைஞர் பேச்சுப் போட்டி விண்ணப்பம்

அன்பார்ந்த தாத்தா,

எங்கள் சங்கத்தின் முதலாண்டு மகாநாட்டில் நடைபெறும் பேச்சுப் போட்டியில் கலந்துகொள்ள என்னையும் ஒருவராகப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்

.................................

(கையொப்பம்)

முழுப் பெயர் .................................

பெற்றார் பெயர் .................................

வயது ................ பிறந்த திகதி .................................

பாடசாலை .................................

விலாசம் .................................

.................................

வகுப்பு .................................

சந்தா எண் .................................

பேசப்போகும் விஷயம் .................................

திகதி .................................

.................................

தலைமை ஆசிரியர் கையொப்பம்

[இந்தப் பத்திரத்தை நிரப்பி, "தாத்தா", C/o 'ஈழகேசரி' சுன்னாகம் என்ற விலாசத்துக்கு 1-4-39-க்குப் பிந்தாது அனுப்பி வைக்கவேண்டும். உறையின்மேல் ஒரு பக்கத்தில் பேச்சுப்போட்டி என்று குறிப்பிடவும்.]

இங்கே கத்தரிக்க

# மீசையால் வந்த நாசம்

(வ. கு)

பட்டாணி என்னும் இனத்தினர் எப்பொழுதும் நீண்டதாடியும், மீசையும் வைத்திருப்பது வழக்கம். மாஜி கெய்சரை நீங்கள் படங்களில் பார்த்ததுண்டல்லவா? அன்னவரின் முறுக்கிய மீசையை ஒத்திருக்கு மென்பதில் ஐயமின்று. அவர்கள் ஆண்மைத்தனத்தோடு கூடிய முஸ்ராசை (moustache) வைத்துக் கொள்ளவேண்டியதுதான் தங்களது உரிமையென்று எண்ணுவதுண்டு. ஒரு நாள் நீண்டு வளர்ந்த ஓர் பட்டாணி ஓர் ஸ்ரீட் (street) வழியாய் முறுக்கிய மீசையோடும், தாடியோடும் பெருமையடித்துக்கொண்டு வெகு கர்வத்துடன், கம்பீரமாய்ச் சென்றுகொண்டிருந்தான்.

அவ்வழியே சென்றுகொண்டிருக்கையில், குள்ளத் தன்மை பொருந்திய வாணிபன் ஒருவன் முறுக்கிய மீசையுடன் தனது கடையிலிருப்பதைக் கண்ணுற்றனன். அப்பட்டாணி, உடனே அவன் கடைக்கு எதிரில் நின்றுகொண்டு "அடே குள்ளா! கேவலமான நீ வீரபுருடத்துவம் வாய்ந்த பட்டாணிபோன்று மீசையை முறுக்கிக்கொண்டிருப்பதா" என்று கடாவினன். அவ்வாணிபன் நான் வைத்திருக்கும் மீசையோ எனக்குச் சொந்தம். அந்த மீசையை நான் எவ்வாறுகவேனும் வைத்துக்கொண்டிருப்பேன்; அதைக் கேட்பதற்கு நீ யார் என்று பதில் விடுத்தனன்.

பட்டாணிக்கு அக்கினிமேல் நெய் பொழிந்தாற்போன்று சினம் மிகுத்தோங்கியது. கையினுல் தான் வைத்திருந்த கூரிய கத்தியைத் தொட்டு அப்படியானுல் உயிர்போகும் வரையில் இருவேமும் சண்டையிட்டே தீரவேண்டும் என்று கர்ஜித்தான். வாணிபன் சற்று யோசனை புரிந்து, மிக்க சாந்தமாய் உனக்குப் பெண்டாட்டி பிள்ளைகள் உண்டென்றே நினைக்கின்றேன் என்றுன். பட்டாணி, எனக்கு நான்கு மனைவிகளும், எழு குழந்தைகளும் இருக்கின்றுர்கள் என்று இயம்பினன். வாணிபன் தனக்குள்ளே தான் சொல்லிக் கொள்வது போல 'எனக்கு ஒரு மனைவியும் இரு குழந்தைகளும் இருக்கின்றுர்கள். எமக்குள் யார் எமபுரஞ் சென்றுலும் வீட்டிலுள்ளார்க்குத் துக்கத்தையே உண்டுபண்ணும். நம்மில் ஒருவர் இறந்த பிறகு நமது இல்லக் கிழத்திகள் அன்னுகாரத்திற்கு வழியின்றித் தவிக்க நேரிடுமே யென்று யோசிக்கிறேன்' என்றுபட்டாணியின் காதிற் படும்படியாகக் கூறினுன். ஓ உனக்குள் விளம்பிய வார்த்தைகளை நானும் செவிமடுத்தேன். அதெல்லாம் சரிவராது; சண்டைக்குத் தயார்செய் என்றுன் பட்டாணி. ஒன்று சரிப்படும்; நாம்இருவேமும் முதலில் நமக்குள்ள ஆஸ்திகளையெல்லாம் நமது மனைவிமக்கள் பேருக்கு எழுதிப் பத்திரத்தைப் ரிஜிற்றர் செய்துவிடுவோம். அந்தப்படி உன் பத்திரத்தைக் கொண்டுவந்து காண்பித்தால், நானும் அப்படியே உனக்குக் காட்டிவிட்டுச் சண்டைக்குத் தயாராக இருக்கின்றேன் என்று புகன்றுன் வாணிபன்.

அதற்கு சம்மதம் என்று பட்டாணி சொல்லிவிட்டு உடனே தன் ஊருக்குச் சென்று தன் ஆஸ்திகளையெல்லாம் நான்கு இல்லக் கிழத்திகளுக்கும் தனித்தனி பகிர்ந்து பாகமேற்படுத்த முயன்றுன். இந்தப் பாகப் பிரிவினையால் மனைவிமக்களுக்கிடையிற் பிணக்கேற்பட்டது. எனக்கு இவ்வளவு சொத்துப் போதாதென்று ஒவ்வொருத்தியும் வாதாடத் தொடங்கினுள். பெருங் கலகமுண்டாயது. கிராமவாசிகள் ஒன்றுகூடி இவ்வளவு விரைவில் பாகஞ் செய்யவேண்டிய காரணம் யாதென விசாரித்தபோது; மீசைச் சண்டையின் வரலாறு உள்ளங்கை நெல்லிக்கனியானது. எல்லோரும் நகைத்தார்கள். பட்டாணி முரட்டுத்தனமாய் ஒரு புறக்றரைக் (Proctor) கொண்டு பத்திரம் எழுதி ரிஜிஸ்தர் செய்துவிட்டு வந்து சேர்ந்தான் வாணிபனின் கடையில். இதன் முடிவையறிவதற்கு பட்டாணியுடன் கூடவந்திருந்தனர் நால்வர். வாணிபன் எவ்வித விசாரமுமில்லாமல் வயிறுரவுண்டுவிட்டுக் கடையில் உட்கார்ந்து தன் மதலைகளோடு கொஞ்சிக்குலாவி மகிழ்ந்து கொண்டிருந்தான். பட்டாணி வந்து உற்றுநோக்குகையில் வாணிபன் தனது கடையில் எப்பொழுதும் போல் முறுக்கிய மீசையோடு ஆசனத்திலமர்ந்திருப்பதைக் கண்டனன். பட்டாணி தனது ரிஜிஸ்தர் பத்திரத்தை எடுத்துக் காட்டிவிட்டு 'மனைவி மக்கள் விசாரம் எனக்குத் தீர்ந்துவிட்டது. நான் இறப்பதற்காகத் தவிப்போர் எவருமில்லை. உன்பத்திரமெங்கே? சண்டைக்குக் கிளம்பு' என்றுன்.

வாணிபன், எனக்குப் பத்திரம் எழுத இப்போது பிரியமில்லை. நீ சண்டைக்கு என்னை அழைக்கிறுயே; அது எதற்காக? என்று எதுவுமே அறியாதவன் போல வினவினுன். காரணம் உனக்குத்தான் தெரியுமே, நீ ஒரு பட்டாணியைப்போல் மீசையை முறுக்கிக் கொண்டிருக்கிறுயே அதற்குத்தான் சண்டை போடுவது; இனி ஒரு நிமிஷமும் பொறுக்க முடியாதென்று கூறி ஆத்திரப்பட்டான். வாணிபன் நமக்குள் சண்டை வேண்டாம். நான் என் மீசையை எடுத்துவிடுகிறேன். நாம் சமாதானமாய்ப் போய் விடுவோம் என்றுன்.

வாணிபன் உடனே தனது மீசையை ஒரு நாவிதனைக் கொண்டு எடுத்து விட்டான். பட்டாணியும் திருப்தியடைந்து தன் கிராமத்துக்குச் சென்றுன். இவனோடு கூட வந்தவர்கள் பட்டாணி வருவதற்கு முன்பே ஊர் சேர்ந்து எல்லா விபரங்களையும் நடந்தவாறு நவின்றனர் மனைவிகளுக்கு. அவர்கள் நடக்கவேண்டிய விதத்தையும் கற்பித்து விட்டனர்.

பட்டாணி வீட்டிற்கு வந்தபோது. அவனது நான்கு மனைவிகளும் சொத்துக்கள்யாவும் தங்களுக்குச், சொந்தமென்றும், அவனுக்குச் சோறுபோட முடியாதென்றும், அவனே சம்பாதித்துப் பிழைக்க வேண்டுமென்றும் விளம்பி விட்டனர். கிராமத்தார்களும் அவர்களின் பக்கஞ் சேர்ந்துகொண்டு பட்டாணியைத் துரத்தி விட்டனர். பணத்தை இழந்தான். பூர்வார்ச்சித

எந்தைச னற்குமர ஞதியெமை ஆட்கொள்வான், வந்த தவத்தினர வாழ்த்துநாள் எந்நாளோ.

# புறப்பாட்டின்பம்

சோழன் நலங்கிள்ளிக்கும் சோழன் நெடுங்கிள்ளிக்கும் பெரும் போர் மூண்டு விட்டது. இரு பெரு வேந்தரும் ஒருவரை யொருவர் வெல்லுங் கருத்துடன் மிக வழிப்புடன் போரை நிகழ்த்தினர்கள். இரு வேந்தரின் படையினும் அளவிறந்தோர் மாய்ந்தொழிந்தனர். ஈற்றில் சோழன் நலங்கிள்ளி, நெடுங்கிள்ளியின் உறையூரை முற்றிகை செய்துவிட்டான். என் செய்வது? ஒரு குலத்திற்றோன்றிய இரு பெரு வேந்தர்கட்கிடையில் நிகழும் போரினல் நாட்டு மக்கள் மிகவும் கலங்கினர். மாற்றாராய மன்னர்கள் மகிழ்ச்சி மிகக் கொண்டனர். இவற்றையெல்லாம் கோவூர்க்கிழார் என்னும் நல்லிசைப் புலவர் கேட்டார். ஆறுத்துயர் கொண்டார். ஒரு குலத்துத் தோன்றிய மன்னர்கள் ஒற்றுமை குலைந்து, போர் புரிதல் ஒரு சிறிதும் பொருந்ாதெனவெண்ணினர். உடனே அவ்விரு வேந்தர்களையும் ஒற்றுமை செய்து வைப்பான் வழிக்கொண்டார். காடு பல கடந்தார். நாட்டு நடுவன் நண்ணினர். போர்ப்பறையொலி, தன் செவிகளைத் துளைக்கப் பொருகளத்துப் புகுந்தார். நாற் படைகளுஞ் சூழச், சோழன் நலங்கிள்ளி உறையூரை முற்றிகை செய்து நிற்பதையும், புறம்வாராது அடைத்தகத்தே சோழன் நெடுங்கிள்ளியிருப்பதையுங் கண்டார். கண்ணீர் வடித்தார். தமிழ்மொழியில் அன்பு கொண்ட அவ்விருவேந்தரையுந் தமிழ்ப்பாட்டினல் அறநெறி கூறி ஒற்றுமைப் படுத்தத் துணிந்தார். நாற்படைகளும் போர்க்கருவிகளுடன் நின்று பெரும் போர்க்களத்தின்கண், அஞ்சா தற்வுரைகள் கூறிய புலவர் பெருமானின் துணிவே துணிவு.

புலவர் என்ன பாட்டுப் பாடினர். புலவரின் பாட்டினல் மன்னர்கள் மாறு படாதொழிந்த தெங்ஙன்? இத்துணைப் பெருமை புலவர்கட்கு முண்டா? என்று கேள்விகளை எழுப்பி விடாதீர்கள். இதோ யான் புலவர் பாடிய பாட்டைத் தருகிறேன் என்னை? புலவர், இரு பெரு வேந்தர்களையும் விளித்தார். வேந்தர்களே! உங்களிலொருவன் பெரிய பனையினது வெள்ளிய தோட்டைச் சூடினேனாகிய சேரனல்லன் அல்லது கரிய கோட்டினையுடைய வெப்ப மலர் மாலையை அணிந்த பாண்டியனல்லன். நீங்களிருவரும் அணிந்திருக்கும் கண்ணிகள் ஆத்தி மலரால் ஆக்கப்பட்டவையே. ஆதலால் நும்மிலொருவர் தோற்பினும் நம் குடியன்றோ. நீங்களிருவரும் போரில் வெல்லுவதும் பொருந்துவதன்று. ஆராய்ந்து பார்க்கின் இங்ஙன் நீவிர் ஒருவருடனொருவர் மாறுபட்டுப் பொருது நிற்றல் நுங்கள் தொன்மை வாய்ந்த குடிப்பெருமைக்குத் தக்கதொன்றன்று. எனவே, நுமது இச்செய்கை கொடியாற் பொலிந்த தேரையுடைய நும்மைப் போலும் வேந்தற்கு உடம்பு பொலிவுறத் தக்க உவகையைச் செய்யும். ஆதலால் நீங்களிருவரும் இப்போரை விட்டு ஒற்றுமைப் படுதலே நுமக்குத் தக்கது.

> "இரும்பனை வெண்டோடு மலைந்தோ னல்லன்
> கருஞ்சினை வேம்பின் றெரியலோ னல்லன்
> நின்ன கண்ணியு மார்மிடைத் தன்றே நின்னொடு
> பொருவோன் கண்ணியு மார்மிடைந் தன்றே
> ஒருவீர் தோற்பினுந் தோற்ப நுங் குடியே
> இருவீர் வேற லியற்கையு மன்றே அதனால்
> குடிப்பொரு ளன்றுநுஞ் செய்தி கொடிநுடங்தேர்
> நும்மோ ரன்ன வேந்தர்க்கு
> மெய்ம் மலி யுவகை செய்யு மிவ் விகலே"

என்பது அப்பாட்டு. உடனே வேந்தரிருவரும் போரொழிந்து புலவரை வாழ்த்தினர்கள். பாருங்கள்! தமிழ் நல முணர்ந்த புலவர்களின் ஆற்றலை. பொய்யா நாவிற் புலவர் பாட்டுக்கள் எத்துணை கருங்கல் நெஞ்சமுடையாரையும் கரைத்து, ஆக்கமளிக்கும் அறநெறியில் அவர்களை அமைத்து வாழச்செய்யும் அருமையுடையன வென்பது இதனும் புலப்படுகின்றது. இனிப் பழந்தமிழகத்தின் மன்னர்கள் பாவலரைப் போற்றி வந்த பண்பும், அப்பாவலர்கள் மன்னர்களை யண்மி, அவர்கட்கு அறத்தின்பெருமையையும் அதனிற்றிரிந்தார். எய்துஞ்சிறுமையையும் எடுத்துரைத்து, அவர்களை நன்னெறிக்காற்றுப் படுத்துவைக்கும் அறநெறிகளுமே புறப்பாட்டுகளில் பொலிந்து கிடக்கக் காணலாம்.

இங்ஙன் புலவர்களின் கையில் தமிழ்நாடு தங்கியிருந்த அந்த நாள் எவ்வளவு பெருமையையும், புலமையையும் பெற்றுப், பிற நாடுகளில் எல்லாம் தன் பெருமையை போக்கி பெரும் புகழ் நிறுத்தியிருந்த பெற்றியைப் புறப் பாட்டுக்களிற்றும் நாங்கள் காணமுடியும். இந்நாட் புலவருமில்லை. புரவலருமில்லை. நாம் நிலமிசை யடிமைகளாய் நிற்கின்றேம். அடிமைத் தளையை அறுத்தெறிந்து எங்களை உரிமை வாழ்வில் நிலைபெறச் செய்வான் காந்தியடிகளார் அரும்பாடு பட்டு வருகின்றார். இவ்வடிகளார் விழையும் உரிமைவாழ்வின் பெற்றிமுரசு இதுபொழுது உலகெல்லாம் ஒலிக்கின்றது. எதிரே வருகின்ற உரிமைத் தமிழகத்தின் உணர்ச்சிவாய்ந்த புலவர்களையும், அவர்களைப்போற்றும் புரவலர்களையும் யாம் வாழ்த்துவோமாக.

> "செந்தமிழ் நாடென்னும் போதினிலே யின்பத்
> தேன் வந்து பாயுது காதினிலே—எம்
> தந்தையர் நாடென்ற பேச்சினிலே யொரு
> சக்தி பிறக்குது மூச்சினிலே"

த. சே. சிவரோத்தினம் (143)
J. S. C. மாணவன்
வேலணை அ. மி. பாடசாலை

---

சொத்துக்கள் யாவையும் இழந்தான். பட்டாணி இப்பொழுது அலைந்து திரிகிறன்.

"மீசைக்குமாசை, கூழுக்குமாசை"

"பொறுத்தார் புவியாள்வர், பொங்கினேர் காடேறுவர்"

என்ற மொழிகளுக்குப் பட்டாணி உரிமையுடையவனானன். அந்தோ! பரிதாம்.

---

பொய்கண்டார் காணப் புனிதமெனும் அத்தவித, மெய்கண்ட நாதன்அருள் மேவுநாள் எந்நாளோ.

# விடாமுயற்சி

முயற்சி, வினை, தொழில் என்பன ஒரு பொருட் சொற்கள். இம்முயற்சி, சரீரமுயற்சி, மனமுயற்சி என இருவகைப்படும். எவர் எவர் எதை எதை அடைய வேண்டுமாயினும் தக்க வகையால் விடாது முயலல் வேண்டும். ஒரு காரியத்தைச் செய்யுமுன் அதைச்செய்தற்குரிய காலத்தையும் செய்தற்கேற்ற இடத்தையும் அக்காரியத்தின் காரணத்தையும் செய்யும்போதும் செய்த பின்னும் வரத்தக்க நன்மைதீமைகளையும் ஆராய்ந்து தனக்குதவியாக வருபவற்றையும் ஆலோசித்துச் செய்யவேண்டுமென்பதை நீதிநூலார்,

> "கால மறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
> மூல மறிந்து விளைவறிந்து — மேலுந்தாம்
> சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்து
> ஆள்வினை ஆளப் படும்"

என்று கூறியுள்ளார்.

ஒன்றைச் செய்யுமுன் காலம், வினை, இடம் என்னும் மூன்றுடனே செய்தற்கு வேண்டிய பொருள்களையும் கருவிகளையும் முதற்கண் ஆராய்ந்து ஆங்காலமாயின் உடனே செய்யவேண்டும். அல்லாத காலமாயின் ஆங்காலம் வருமளவும் பொறுத்திருந்து செய்யவேண்டும். இது பற்றியே,

> காலங் கருதி யிருப்பவர் கலங்காது
> ஞாலங் கருது பவர்"

என்று திருவள்ளுவ நாயனார் கூறியுள்ளார். நிற்க,

முயற்சியால் அடையத்தக்கது எதுவுமில்லை. எல்லாம் விதியின்படியே நடக்குமென்று பலர் கூறுகிறார்கள். மார்க்கண்டேய முனிவர் விடாமுயற்சி கொண்டு சிவபெருமானை வழிபட்டுவந்து தன்உயிரைக் கொண்டுபோக வந்த யமன் உயிரையும் பறிப்பித்து இன்னும் இறவாத பதவியைப்பெற்றார். ஒருவன் அளவற்ற செல்வமுடையவனாயிருந்தாலும் யாதொரு முயற்சியுமின்றி யிருப்பானாயின் சோம்பல், கொட்டாவி, விரல் நொடித்தல் முதலாம் துர்ப்பழக்கங்களினாற் பீடிக்கப்பட்டுத் துன்பத்தை அடைவான். வறியவனாயிருந்து விடாமுயற்சியைக் கைக்கொண்டு தேனீ, எறும்பு முதலாய பிராணிகளைப்போல் உழைத்து வருவானாயின் பெருஞ் செல்வனாகித் தனம், தானியம், வீரம், ஜயம் முதலாம் இலக்ஷ்மி கடாக்ஷமுடையவனாவான் என்பது,

> "முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
> இன்மை புகுத்தி விடும்".

என்பதினால் நன்கு விளங்கும்.

ஒரு காரியத்தைச் செய்யும் போது தெய்வச் செயலாலும் மானிடக்குற்றத்தாலும் நேரிடும் இடையூறுகளால் மனத்தளர்ச்சியுற்றுப் புத்தி கெடுகின்றனர். அங்ஙனந் தளர்ச்சியடையாது மென்மேலும் முயன்றால் காரியங்கள் இனிது நிறைவேறும். "பகீரதப்பிரயத்தனம்" என்னும் பழமொழியை உற்று ஆராயுமிடத்து முற்காலத்தில் ஒருவன் ஆகாயகங்கையைப் பூமிக்குக் கொண்டுவரப் பலநாள் முயன்று இறந்தான். பின்பு அவன் மகன் பலகாலும் முயன்று இறக்க அவன் மகன் பகீரதன் விடாது முயன்று ஆகாயகங்கையைப் பூமிக்குக் கொண்டுவந்து காரியத்தை நிறைவேற்றினான் என்பது புலனாகின்றது. இன்னும் சாவித்திரி என்னும் பெண் விடாது முயற்சி செய்தமையாலன்றோ தன் கணவன் உயிரையும் தன் மாமி மாமனது நேத்திரத்தையும் பெற்றாள். ஆதலின் நாங்கள்,

> "மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
> எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் — செவ்வி
> அருமையும்பாரார் அவமதிப்புங் கொள்ளார்
> கருமமே கண்ணா யினார்."

என்ற முதியோர் வாக்கிற்கிணங்க ஒழுகி வரவேண்டும். ஒவ்வொருநாளும் சுறு சுறுப்பாய் வேலைகளைச் செய்து கஷ்டமேற்பட்ட காலத்து எடுத்த தொழிலை விடாது "பலகால் எறும்பூரக் கல்லுந் தேயும்" என்பதை மனத்திலுன்னி உற்சாகத்தோடும் கவனத்தோடும் உழைத்துக் காரியசித்தியை அடையவேண்டும்.

வ. சின்னத்துரை
VII வகுப்பு
இருபிட்டி அ. மி. பாடசாலை, புங்குடுதீவு.

## 'ஈழகேசரி இளைஞர் சங்கம்'

அன்புள்ள பேரன் பேர்த்திகாள்!

நீங்கள் அனுப்பிய கடிதங்கள் கிடைத்தன. அவற்றிற்குரிய பதிலை அடுத்த வார அனுபந்தத்தில் எதிர்பார்க்கவும்.

—தாத்தா

### புதிய அங்கத்தவர் (முற்றொடர்)

225. நா. அரிகரசர்மா
226. வி. பொன்னுத்துரை
227. சி. சிற்சபேசசர்மா
228. கோ. பொன்னுத்துரை
229. வே. தணிகாசலம்
230. ம. க. நடராஜா
231. சி. கோபாலபிள்ளை
232. த. வேலுப்பிள்ளை
233. பூ. சி. நடராஜா
234. சி. முதலித்தம்பி
235. க. வேலாயுதம்பிள்ளை
236. இ. அ. நடராஜா
237. சி. சேனாதிராஜா
238. த. சுந்தரலிங்கம்
239. த. நல்லமுத்து
240. க. அமிர்தரத்தினம்
241. செ. தெய்வானை
242. ஆ. க. சச்சிதானந்தம்
243. மு. தையல்நாயகம்
244. வ. தினகரம்பிள்ளை

### சந்தா புதிப்பித்தவர்கள்

69. (அரை வருடம்)
170. மாரிமுத்து (அரை வருடம்)
120. (அரை வருடம்)

யாழ்ப்பாணம்-மயிலிட்டி தெற்கு "திருமகள்நிலைய" த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் 'தலையாட்டியி' லுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1939-ம்ளூ மார்ச்சு 26உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.